1984 மார்ச் 7]

மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இது கீழ்மா விலங்கையில் நடைபெற்ற பிரச்சினை பற்றிய வினாவாகும். தனிக் கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. ஆ. நல்லசிவன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அறிக்கையிலே, சத்துணவுத் திட்ட மையங்களைக் கண்காணிக்கச் சென்று, நடவடிக்கை எடுத்ததாக அறிகிறோம். சத்துணவுக் கூடங்களைத் தொடர்ந்து கண் காணிக்க அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கொண்ட கண் காணிப்புக் குழுக்களை ஒவ்வொரு மையத்திற்கும் ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. சௌந்திரராஜன் : இப்போதே கண்காணிப்புக் குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் முறையாகச் செயல்பட சில சட்டச் சிக்கல்கள் இருப்பதால், அதை முறைப்படுத்த அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.
(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்)

2. தகவல் கோரல்.

— ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளுதல் பற்றி — —

டாக்டர் இரா. சனார்த்தனம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே. பெங்களூர் சம்பவம் குறித்து நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு என்னுடைய அறையிலேயே சொன்னேன். அது பரிசீலனையில் இருக்கிறது.